**தலைப்பு 431 – தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு மீளாய்வாண்டின் போது ஸ்தாபிக்கப்பட்டிருந்தமையினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவையொன்று காணப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

#### (அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அமைச்சின் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான ஐந்தொகையின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 109,202 ஆக இருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதி செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் | இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது அந்த வருமான பெறுவனவுகள் இறுதிக் கணக்கில் உள்ளடக்குதல் தவறவிடப்பட்டிருந்தது. எனினும் 2020 ஆம் ஆண்டிற்காக இந்த அமைச்சிற்கு 109,202 தொகையான வருமானம் | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பெறுவனவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எந்தவொரு பெறுமதியும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதனால் பெறுவனவுகளின் பெறுமதி அப்பெறுமானத்தினால் குறைவடைந்திருந்தது. | கிடைக்கப் பெற்றிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். | |
| (ii) | திறைசேரி அச்சிடல் குறிப்பின் (எஸ்.ஏ 52) பிரகாரம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பெறுவனவு மீதி ரூபா 358,339 ஆக இருந்த போதிலும், நிதி செயலாற்றல் கூற்றில் அது ரூபா 87,960 ஆக ரூபா 270,379 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பெறுவனவு மீதி ரூபா 358,339 ஆக இருந்தமை சரியானதாகும். கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டதன் பிரகாரம் முற்பண பெறுவனவுகளின் மொத்த தொகையான ரூபா 358,339 தொகை நிதி செயலாற்றல் கூற்றில் பெறுவனவுகளின் கீழ் குறிப்பிடப்பட வேண்டியதை ஏற்றுக் கொள்கின்றோம். | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி செயலாற்றல் கூற்றில் மூலதன சொத்துக்களின் கைப்பற்றல்களின் பெறுமதி ரூபா 1,773,130 ஆக இருந்த போதிலும், நிதியல்லா சொத்துக்கள் தொடர்பாக கூற்றில் (ஏசீஏ 6) நிதியல்லாத சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி ரூபா 1,564,299 ஆக ரூபா 208,831 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக் கூற்றில் (ஏசீஏ 6) நிதியல்லாத சொத்துக்கள் கைப்பற்றல்களின் பெறுமதி ரூபா 1,564,299 ஆக குறிப்பிடுதல் ரூபா 1,773,130 ஆக சரியாக்க வேண்டிமையை ஏற்றுக் கொள்கின்றோம். | நிதியல்லாத சொத்துக்களின் கைப்பற்றல்கள் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

(இ) கட்டு நிதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிச் செயலாற்றல் கூற்றில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 2,044,081,783 ஆக இருக்க வேண்டிய போதிலும், அந்த மீதி பிழையாக ரூபா 2,039,800,555 ஆக ரூபா 4,281,228 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமான பெறுவனவுகளின் மீதி ரூபா 109,202 தொகையாகவும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண பெறுவனவுகளின் மீதி ரூபா 87,960 இற்குப் பதிலாக ரூபா 358,339 தொகையாகவும் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கொடுப்பனவுகளின் மீதி ரூபா 706,673 தொகைக்குப் பதிலாக ரூபா 5,367,507 தொகையாகவும் உள்ளடக்கப்பட வேண்டிய மீதி ரூபா 2,044,081,783 ஆக சரியாக இருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

(அ) வைப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட வைப்பு கணக்குகள் தொடர்பாக கூற்றில் (ஏசீஏ – 4) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1,275 ஆக பதியப்பட்டிருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வைப்புக் கணக்கு மீதியொன்று காணப்படவில்லை. அதன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் தேறிய சொத்துக்களின் மீதி ரூபா 1,275 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏசீஏ – 4 இன் 2020.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 1,275 ஆக குறிப்பிடப்பட்டிருந்தமை சரியானதாகும். எனினும், நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வைப்புக் கணக்கின் மீதியாக ரூபா 1,275 தொகை குறிப்பிடப்பட்டமை தவறினால் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி நிலைமை கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 திசெம்பர் செலவின பொழிப்பு (SA 10) இன் பிரகாரம் மூலதன சொத்துக்களின் கைப்பற்றல் பெறுமதி ரூபா 1,773,130 ஆக இருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியாக ரூபா 1,564,299 ஆக ரூபா 208,831 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,564,299 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், அது ரூபா 1,773,130 ஆக குறிப்பிடப்பட வேண்டியமையை ஏற்றுக்கொள்கின்றோம். | மூலதன சொத்துக்கள் கூற்று சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.3 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்படாமை**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 891(i) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கி பிணைப் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு பணத்தை அறவிடல் ஆரம்பிக்கப்பட்டு பிணை வைப்பு பதிவேட்டை பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 891(i) இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை உள்ளடக்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 12 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 288 மில்லியன் கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடுகளில் கூட்டு மொத்தாக ரூபா 261 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு ரூபா 27 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவின மதிப்பீடு சாத்தியமானதாக தயாரித்தல் தொடர்பாக அமைச்சின் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இது அமைச்சின் அமைச்சரின் பதவியணியினரின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ஆகும். அமைச்சு ஆரம்பித்தல் சிக்கலானதாக இருந்தமையால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2020 திசெம்பர் மாதம் வரையிலும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதனால் செயற்பாட்டு செலவினங்கள் குறைவடைந்திருந்தது. | சாத்தியமானதாக மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 06 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 193 மில்லியன் கூட்டுத் தொகையான நிதி ஏற்பாடுகளில் கூட்டு மொத்தமாக ரூபா 128 மில்லியன் பயன்படுத்தப்பட்டு ரூபா 65 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 34 சதவீத குறைவாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | அமைச்சு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினால் இயந்திர உபகரணங்கள், கட்டிடங்கள், வாகனங்களை மெருகூட்டுதல் போன்றவைகளுக்காக செலவினங்கள் செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் காணப்பட்ட கொவிட் 19 நோய் நிலைமையின் காரணமாக அபிவிருத்தி செயற்பாடுகளை அமுல்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமையினால் அந்த செலவின விடயங்களில் செலவினங்கள் குறைவடைந்திருந்தது. | மூலதன செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்காக ஆண்டின் ஆரம்பம் முதல் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட செலவின கூற்றில் (ஏசீஏ – 2 ii) மொத்த செலவின நிரலில் காண்பிக்கப்பட்ட 10 செலவின விடயங்களுக்கும் செலவின பேரேட்டில் உள்ளடக்கப்பட்ட அந்த செலவின விடயங்களின் பெறுமதிகள் என்பவற்றுக்கும் இடையே ரூபா 923,643 தொகையான இணங்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2020 நவம்பர் மாதம் வரை இந்த அமைச்சிற்குரிய செலவினங்கள் பெருந்தோட்ட அமைச்சினாலேயே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. செலவின பேரேடு அந்த அமைச்சினாலே பேணிச் செல்லப்பட்டிருந்தது. இந்த அமைச்சிற்குரிய செலவினங்களுக்கான நிதி ஏற்பாடுகள் பெருந்தோட்ட அமைச்சினால் கையளிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. சில செலவின விடயங்களின் கீழ் செலவின பேரேட்டில் குறிப்பிடப்பட்ட தொகை மற்றும் அமைச்சினால் கணக்கீடு செய்யப்பட்ட தொகை என்பவற்றுக்கு இடையே வேறுபாடுகள் காணப்பட்டன. 2020 ஆம் ஆண்டின் செலவின பேரேட்டில் ஒழுங்குமுறையானதாக குறிப்பிடப்படாத போதிலும், நிதிக் கூற்று தயாரிப்பதற்காக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டு சரியான செலவின விடயங்கள் உரித்தாக்கப்பட்டிருந்தமையை குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | வேறுபாடுகள் ஏற்படாத வகையில் செலவின பேரேடு சரியான பேணிச் செல்லப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

**அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சில் நிதிப் பிரமாணம் 880(i) இன் கீழ் நிர்வாக உத்தியோகத்தர், பணம் அறவிடுபவர், களஞ்சிய உத்தியோகத்தர், சாரதி போன்ற பதவிகளில் 5 பேர்களிடம் இருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. | அமைச்சில் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களின் பிணை வைப்பை அறவிட்டு பிணை வைப்பு பதிவேட்டை பேணிச் செல்வதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கை 66 ஆக இருந்ததுடன், அதில் 38 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அமைச்சு புதிதாக ஆரம்பிக்கப்பட்டமையினால் 2020.12.31 இல் உள்ளவாறு பதவியணியினரில் வெற்றிடங்கள் காணப்பட்டன. மிகவும் விரைவாக அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது என குறிப்பிடுகின்றோம். | அத்தியவசிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். |